செ.வெ.எண்: 74 நாள்:26.08.2016

# பத்திரிகைச் செய்தி

## கால்நடை பராமரிப்புத்துறை
## "இலாபகரமான கால்நடை வளர்ப்பிற்கு அரசு மானியத்துடன் கூடிய தீவனப்பயிர் அபிவிருத்தி திட்டம்"

கால்நடைகளின் உற்பத்தித்திறனுக்கு தீவனம் மற்றும் பசுந்தீவனம் மிகவும் இன்றியமையாத காரணிகள் ஆகும். பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு, கறவை மாடுகளுக்கு தேவையான அளவு பசுந்தீவனம் வழங்குவது மிகவும் இன்றியமையாதது. கால்நடைகளுக்கான மொத்த உற்பத்தி செலவினத்தில் 65-70 விழுக்காடு, தீவன மற்றும் பசுந்தீவன உற்பத்திக்கு மட்டுமே செலவிடப்படுகிறது. கால்நடைகளுக்கு பசுந்தீவனத்தின் தேவைக்கும் உற்பத்திக்கும் இடையே மிகப்பெரிய இடைவெளி உள்ளது.

ஆகவே, தீவனப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையிலும், கால்நடை வளர்ப்போர் பசுந்தீவனத்தை உற்பத்தி செய்வதை ஊக்கப்படுத்தும் வகையிலும் தமிழக அரசு கடந்த 5 ஆண்டுகளாக மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் நடப்பு நிதியாண்டில் அரசு மானியத்துடன் கூடிய கீழ்க்கண்ட தீவனப்பயிர் சாகுபடி திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளது.

அ) இறவையில் பல்லாண்டு தீவன சோளம் (Co-Fs 29) 0.25 ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்திட தீவன விதைகள் வழங்குதல்.(பயனாளிக்கு அதிகபட்சம் 1 ஏக்கர்)

ஆ) மானாவாரியில் 0.25 ஏக்கர் பரப்பில் தீவனச் சோளம் மற்றும் தீவனத் தட்டைப்பயறு சாகுபடி செய்திட தீவன விதைகள் வழங்குதல்.(பயனாளிக்கு அதிக பட்சம் 2 ஏக்கர்)

இ) புல்நறுக்கும் கருவிகள் நிறுவுவதற்கு விவாசாயிகளுக்கு(60%) மானியம் வழங்குதல்.

ஈ) மரவகை தீவனத்தின் முக்கியத்துவத்தை உணர்த்த கல்யாணமுருங்கை, அகத்தி, சூபாபுல் போன்ற மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்குதல். மரவகை தீவனப்பயிர் உற்பத்தியை பெருக்குதல் மூலம் கோடை மற்றும் தீவன பற்றாக்குறை காலங்களில் தீவனம் கிடைக்க செய்தல்.(பயனாளிக்கு அதிகபட்சம் 10 மரக்கன்றுகள்)

உ) அசோலா திடல் அமைக்க ஒரு அலகு மானியம் ரூ.2550/- (100% மானியம்)(ஒவ்வொரு விவசாயிக்கும் அதிகபட்சம் 2 அசோலா அலகுகள்)

ஊ) தீவனப்பயிர் அதிக அளவில் கிடைக்கும் காலங்களில் அவற்றை சேகரித்து, பதப்படுத்தி, ஊறுகாய்ப்புல் (Silage)-ஆக கால்நடைகளுக்கு தீவனப்பற்றாக்குறை காலங்களில் வழங்குவதற்கு 250 கிலோ கொள்ளளவு உடைய 4 சைலேஜ் பைகள் ஒரு விவசாயிக்கு ஊறுகாய்ப்புல் தயாரித்திட இலவசமாக வழங்கப்படும்.

மேற்காணும் திட்டங்களின் மூலம் பயன்பெற விருப்பமுள்ள கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள கால்நடை உதவி மருத்துவரை நேரில் தொடர்பு கொண்டு பயன்பெற விருப்பமுள்ள திட்டங்களை குறிப்பிட்டு எழுத்து மூலமாக விண்ணப்பம் அளித்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எல்லா இனங்களிலும் 30% தாழ்த்தப்பட்ட/பழங்குடி பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**